10.11.2025 O.S 276/2016 பி.வா.சா1 விஜய்சிங்ராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி

1. 04.09.1924 தேதியில் குலசேகரப்பட்டி கிராமம் அயன் புஞ்சை சர்வே எண். 343ல் தென்புறம் ஏக்கர் 1.35 1/2 மற்றும் சர்வே எண்.344/5ஏ ஆகிய சொத்துக்களை பேச்சிமுத்து தேவர் மனைவி முத்தம்மாளுக்கு மாடக்கண்ணு நாடார் குமாரர்கள் மோசோ நாடார் மற்றும் பாலு நாடார் ஆகியோர்கள் எழுதிக்கொடுத்த அடமான ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.29

2. 17.02.1951 தேதியில் குலசேகரப்பட்டி கிராமம் அயன் புஞ்சை சர்வே எண்343, ஏக்கர் 2.71ல் பிரிவின்றி பாகம் பாதியை பொறுத்து அருணாசல நாடார் குமாரர் சீனிநாடாருக்கு மாடக்கண்ணு நாடார் குமாரர் பால் நாடார் எழுதிக்கொடுத்த அடமானஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.30

3. 04.09..1984ம் தேதியிட்ட எம்.கே.வி. கந்தசாமி நாடார் குமாருமாரன கே.பெரியசாமி நாடாருக்கும் அவரது ஸ்தானத்தில் பின்வருபவருக்கும் பாவூர்சத்திரத்தில் இருக்கும் மோ.சீனி நாடார் குமாரர்கள் யாக்கோபு, செல்வராஜ் பால்பாண்டி, செல்லையா நாடார் குமாரர்கள் சி.மோசஸ் செல்வராஜ், தேவதாஸ் சாமுவேல், மைனர்கள் இம்மானுவேல், தினகரன், சாந்தகுமார், தாவீது மேற்படியார்களுக்காக 3லக்க நபர் தனக்காகவும், தனது சகோதரர்கள் மைனர்களுக்கு கார்டியனாகவும் குலசேகரப்பட்டி கிராமம் அயன்புஞ்சை சர்வே எண்.343, ஏக்கர் 2.71ல் வடபாதி ஏக்கர் 1.35 1/2ல் தென்கிழக்கில் செண்ட் 2.5 போக ஏக்கர் 1.33ஐ பொறுத்து எழுதி கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் பி.வா.சா.ஆ.31

4. 18.09.25 தேதியில் குலசேகரப்ப்டி கிராமம் அயன்புஞ்சை சர்வே எண்.343, ஏக்கர் 2.70ஐ பொறுத்து 31.05.1924ம் நாள் முதல் 31.12.1950 நாள் முடிய உள்ள வில்லங்க சான்று எண். 256/2025 பி.வா.சா.ஆ.32

5. 18.09.2025ம் தேதியில்ல 1.1.1951 முதல் 31.12.1966ம் தேதியிட்ட வில்லங்க சான்று எண் 257/25 19.09.2025ம் தேதியிட்ட 1.1.1975 முதல் 18.09.2025 வரையிலான வில்லங்க சான்று ஆன் லைன் நகல் பி.வா.சா.ஆ.33 வரிசைகள்

6. 18.09.25 தேதியிட்ட 1.1.1967 முதல் 31.12.1974 வரையிலான வில்லங்க சான்று பி.வா.சா.ஆ.34

7. 19.09.25ம் தேதியிட்ட குலசேகரப்பட்ட கிராமம் அயன் புஞ்சை சர்வே எண்கள் 340, 341, 342,344,345 மற்றும் 346 ஆகியவைகளை பொறுத்த இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட நில அளவை ஆவணங்கள் எண்ணம் 6 பி.வா.சா.ஆ.35 வரிசைகள்.

8. 19.09.2025ம் தேதியில் எதிர்வழக்குரை அட்டவணை சொத்து உள்ளிட்ட இதர சொத்துக்களை பெறுத்து காலஞ்சென்ற எம்.கே.வி.கந்தசாமி நாடார் குமாரர் எம்.கே.வி.கணேசன், முத்து புதியவன் நாடார் குமாரர் குலசேகர நாடார், பால் நாடார் உள்ளிட்ட 19 நபர்கள் எழுதி கொடுத்த பாதை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட தென்வடல் பாதையான எம்.கே.வி.கே கணசேன் பெயரிலான சலையையும், எதிருரை அட்டவணைச் சொத்தையும் அதற்கு அருகாமையில் உள்ள சொத்துக்களையும் விவரிக்கும் கூட்டு வரைபடம் பி.வா.சா.ஆ.36 வரிசைகள்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி